# 5 வணிக நடவடிக்கைகள்

**இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம்,**

- நாளாந்த நடவடிக்கைளின் பொழுது எமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு பொருட்கள் சேவைக ளை இனங்காணல்.
- அத்தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொழுது அல்லது கேள் வியெழுப்பும் போதோ தேவை, விருப்பங்களின மீது செல்வாக்குச் செலுத்தும் எங்களது நடத்தைகளை அறிதல்.
- பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது கவனத் தில் கொள்ள வேண்டிய விடயங்களை அறிதல்.
- பிரதேசத்தின் தேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் அமைப்புகளையும் அறிந்துகொள்ளல்.
- உற்பத்தித் தொழிற்பாடும் உற்பத்திச் செலவினத்தையும் கணிப்பிடல்.

**போன்ற விடயங்கள் தொடர்பான வணிக நடவடிக்கைத் துறைகளுக்குரிய எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடைய முடியும்.**

## அன்றாட நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் பொருள்களும் சேவைகளும்

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொருட்களும் சேவைகளும் அவசியமாகின்றன. இப்பொருள்களையும் சேவைகளையும் பூர்த்தி செய்ய வணிக நிறுவனங்கள் உதவுகின்றன. பொருட்கள் வாங்கும் போதும் சேவைளைப் பெற்றுக் கொள்ளும் போதும் சரியான தீர்மானத்தைப் மெற்கொள்வதன் மூலமும் தரமான பொருள்களையும் சேவைகளையும் நுகர முடியும்.

### பொருள்கள்

தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்யப் பயன்படுத்திக்கொள்ளும் கண்ணால் பார்க்கத்தக்கதும் தொட்டுணரக் கூடியதுமான அனைத்தும் பொருள்களாகும். அன்றாட வாழ்க்கையில் மனிதனுக்குத் தேவையான உணவு, குடிபானங்கள் , ஆடை அணிகள், அரிசி, மா, பிஸ்கட், பாடசாலைப் புத்தகங்கள், பைகள், பாதணிகள், பேனை, பென்சில், விளையாட்டுப் பொருள்கள், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி போன்றனவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.




### நாளாந்த பாவனைக்கான பொருள்கள்














## பொருள்களில் காணப்படும் பண்புகள்

- தேவையான இடத்திலிருந்து தேவையான நேரத்துக்குப் பெற்றுக் கொள்ளக் கூடியது.
- தொட்டுணரக் கூடியது.
- கண்ணால் பார்க்கக் கூடியது.
- சேமித்து வைக்கக் கூடியது.
- வடிவமைப்புடையது.
- வேறுபடுத்தக்கூடியது.

## பொருள்களின் வகைகள்

நாம் அன்றாடம் பயன்படுத்தக் கூடிய பொருள்களை இருவகைப் படுத்தலாம்.

1. பொருளாதாரப் பொருள்கள்.
2. இலவசப் பொருள்கள்.

## பொருளாதாரப் பொருள்கள்

மனித முயற்சியால் இயற்கையாகக் கிடைக்கும் வளங்களில் மாற்றமேற்படுத்தி அவற்றிற்கு பெறுமதியொன்றை உருவாக்கும் பண்டம் பொருளாதாரப் பண்டமாகும்.

உ+ம்:- மட்பாண்டங்கள்




## இலவசப் பொருள்கள்

மனித முயற்சி எதுவுமின்றி இயற்கையாகவே கிடைக்கும் பொருள்கள் இலசப் பொருட்களாகும். இவை மனித வாழ்விற்கு அத்தியாவசியமானதாகும். இவை அருமைத்தன்மையாகவும் விலை மதிப்பற்றவையாகும்.

உ+ம்: சூரிய ஒளி, மழை நீர், வளி.







**செயற்பாடு: 1**

1. நீர் காணக்கூடிய பொருள்களைப் பட்டியல் படுத்திக் காட்டுக.

2. கீழ்வரும் பொருள்களை பொருளாதாரப் பொருள்கள் இலவசப் பொருள்கள் என வகைப்படுத்திக் காட்டுக.
   புத்தகம், பேனா, பென்சில், குடம், டொபி, குழாய் நீர், காற்று, சூரிய ஒளி, மேசை, பூச்சாடி.

| பொருளாதாரப் பொருள்கள் | இலவசப் பொருள்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

☐ பொருள்களை மேலும் இருவகைப்படுத்தி நோக்கலாம்.

1. கைத்தொழில் பொருள்.
2. நுகர்வுப்பொருள்கள்.


## கைத்தொழிற் பொருள்கள்

பொருளொன்றை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் கைத்தொழிற் பொருள்கள் எனப்படும்.
உ+ம்: சீனியை உருவாக்குவதற்கு கரும்பு பயன்படுத்தப்படுகிறது. இங்கு கரும்பு கைத்தொழிற் பொருளாகும்.

## நுகர்வுப் பொருட்கள்

மனிதனின் இறுதி நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்தும் நுகர்வுப் பொருட்களாகும்.

உ+ம்: அரிசி :- வீட்டுத்தேவைக்கு வாங்குதல்.



**செயற்பாடு:**

பின்வரும் பொருள்களை நுகர்வுப்பொருள், கைத்தொழிற் பொருள் என பட்டியல்படுத்துக.

- வீட்டில் நுகரும் மின்சாரம்.
- தேனீர் கடையில் பயன்படுத்தும் சீனி.
- தொழிற்சாலையில் உபயோகிக்கும் மின்சாரம்.
- வீட்டுத் தேவைக்கான அரிசி.
- வீட்டுப் பாவனைக்கான சவர்க்காரம்.
- சீனி உற்பத்திக்கான கரும்பு.

| நுகர்வுப் பொருள் | கைத்தொழில் பொருள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## சேவைகள்

மனிதனது தேவைகளைப் பூர்த்தி செய்ய சேவைகளும் அவசியமாகும். ஒரு குழுவினரால் இன்னொரு குழுவினருக்குச் சேவைகள் வழங்கப் படுகின்றன.

உ+ம் : ஆசிரியர் சேவை
தபாற் சேவை
வைத்திய சேவை

## சேவைகளில் காணப்படும் பண்புகள்

- தொட்டுணர முடியாமை.
- சேமித்து வைக்க முடியாமை.
- சுவையை அறிய முடியாமை.
- உரிமையை இன்னொருவருக்கு வழங்க முடியாமை.

## சேவைகள் சம்பந்தமான படங்கள்


தாதி


தபாற்காரர்


பஸ் சாரதி




ஆசிரியர்



பாதிரியார்



வைத்தியர்



மேசன்



சில்லறை வியாபாரி



வாகன சுத்திகரிப்பாளர்




ஒட்டுநர்



தீயணைப்பு படையினர்



காவலர்




## செயற்பாடு - 1

புத்தகம், பேனை, பிஸ்கட், டொபி, கதிரை, கிணற்று நீர், தண்ணீர் போத்தல், விளையாட்டுப் பொருள்கள், துவிச்சக்கர வண்டி, பாதணி, மீன், பழ வகை, மூலிகைத்தாவரங்கள்

மேற்காட்டியுள்ள பொருட்களை கீழ்க்காட்டியுள்ள அட்டவணையில் வகைப்படுத்தி எழுதுக.

| தொடர் இல. | இயற்கையில் கிடைக்கும் பொருள்கள் | இயற்கை நியதிகளின் கீழ் பெற முடியாதவை |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |
| 13 | | |



## செயற்பாடு - 2

எமது வீட்டில் நாளாந்த நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்படும் பொருள்கள். சேவைகளைப் பட்டியல்படுத்திக் காட்டுக.

## 5-1 பாடசாலையின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருள்களும் சேவைகளும்.

### எங்கள் பாடசாலை



பாடசாலை செயற்பாட்டிற்கு பொருள்களும் சேவைகளும் தேவையாகவுள்ளன. அத்தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பாடசாலையில் இருந்து பெற்றுக் கொள் ளப்படும் பொருள்கள் சேவைகள் எவையெனப் பார்ப்போம்.




பாடசாலையின் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் பொருள்களும் சேவைகளும் எவையென தேடிப்பார்ப்போம்

## புத்தகங்கள்



புத்தகங்கள் கற்பதற்கு அவசியமாகும். இவை வகுப்பு ரீதியாகவும் பாடரீதியாகவும் மொழி ரீதியாகவும் வேறுபடுகின்றன.

புத்தகங்கள் மாணவரின் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. அதேபோல சஞ்சிகைகள், படவரைபுகள், பயிற்சிப் புத்தகங்கள், பேனைகள் தேவைப்படுகின்றன. அடுத்து கணினியும் பயன்படுத்தப்படுகிறது.



## கற்றல் உபகரணம்

கற்றலுக்குப் புத்தகங்கள் போல உபகரணங் களும் அவசியமாகும். பென்சில், பேனை, பயிற்சிக் கொப்பி, அழிறப்பர், வர்ணப் பேனைகள், கணித உபகரணங்கள் என உதாரணங்கள் கூறலாம்.




## வகுப்பறை

வகுப்பறையில் பல்வேறு பொருட்கள் காணப்படுகின்றன. அவைகளாவன ஆசிரியர் மேசை, கதிரை, கரும்பலகை, வெண்கட்டி, துடைப்பம், குப்பைத் தொட்டி மாணவர் மேசை போன்றவை.

## விஞ்ஞான ஆய்வுகூடம்

விஞ்ஞான தொழினுட்ப பாடத்திற்குரிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு விஞ்ஞான ஆய்வுக் கூடம் பயன்படுத்தப்படும். இதில் பல்வேறு இரசாயனத் திரவங்கள், உபகரணங்கள், நீர், மின்சாரம், வாயுக்கள், போன்ற பொருட்கள் உள்ளன.



## மனையியற் கூடம்

மனையியற் பாடத்தை கற்கும் போது செயன்முறைகள் இடம்பெறுவதால் பின் வரும் பொருள்கள் தேவையாகின்றன. வாயு அடுப்பு, சிலின்டர், பாத்திரங்கள், தையல் இயந்திரம், நீர்வசதி, கட்டில், தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி போன்றவையும் உணவு தயாரிப்பதற்கான செயற்பாடுகளுக்கு தேவையான பொருட்களான முட்டை, கோதுமைமா, பட்டர், எண்ணெய் போன்றவையும் ஆகும்.





முட்டை அடிகருவி



அரைப்பான் (கிரைன்டர்)



பிளென்டர்

## விவசாயக் கூடம்



விவசாயக் கூடமொன்றில் பின்வரும் பொருட்களைக் காணலாம்.

- மண்வெட்டி.
- வாளி.
- பூவாளி.
- வித்துக்கள்.
- உரவகைகள்.
- கிருமி நாசினி.

## விளையாட்டு மைதானம்

மாணவரின் உடலுள வளர்ச்சிக்கு விளை யாட்டுகள் அவசியமாகும். பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பல்வேறு விளையாட்டுப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- கிரிக்கட் உபகரணங்கள்.
- பந்து வகைகள்.
- வலை.
- பல்வேறு உபகரணங்கள்.



## அதிபர் அலுவலகம்



பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்குப் பாட சாலையில் அதிபர் அலுவலகம் அவசியமாகும்.

இவ்வலுவலகத்தில்

- அதிபர் மேசையும் கதிரையும்.
- பிரமுகர்களுக்கான ஆசனங்கள்.
- தொலைபேசி.
- கணினி.
- ஆவணங்களைப் பாதுகாக்க அலுமாரிகள்.
- தகரத்திலான அலுமாரிகள்
- பேனை வைக்கும் பெட்டி
- சிறய அழைப்பு மணி
- மேசைப் புடைவை
- கழிவகற்றல் கூடையொன்று

## ● பாடசாலை நூலகம்



பாடசாலை மாணவரின் அறிவினை விருத்தி செய்ய பாடநூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள் போன்றவற்றை நூலகத்தில் பயன்படுத்த முடியும்.

## கட்புல செவிப்புல சாதனங்கள்


பாடசாலையில் பல்வேறு ஊடகங்களும் கற்றல் உபகரணங்களும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:



தொலைக்காட்சி




கணினி



வானொலி



தொலைபேசி



## பயிற்சி

01. பாடசாலையின் தேவைகளுக்காகப் பயன்படும் பொருள்கள் பற்றிக் குறிப்பிடுக.

02. வகுப்பறையில் கற்பிக்கப்பட்ட பாடமொன்றுடன் தொடர்புடைய செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பொருள்களைத் தருக.

## எமது பாடசாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் சேவைகள்

பாடசாலையின் செயற்பாட்டிற்குத் தேவையான பொருள்கள் பற்றியறிந்து கொண்டோம். பொருட்களைப் போல சேவைகளும் பாடசாலைகளின் தேவை களை நிறைவேற்றுவதற்கு முக்கியமாகவுள்ளன.

### • அதிபர்

பாடசாலை முகாமைத்துவ நடவடிக் கைகளையும் நிருவாக நடவடிக் கைகளையும் அதிபர், பிரதி அதிபர் கள் மேற்கொள்வர்.



- **ஆசிரியர்**



கற்பித்தல் நடவடிக்கைகளில் ஆசிரியர் ஈடுபடுவர். இவர் மாணவர்களின் வழிகாட்டியாகவும் இருப்பார்.

- **கல்விசாரா ஊழியர்களும், சிற்றூழியர்களும்**

பாடசாலையின் நிர்வாகத்திற்கும் மேலும் சிறு சிறு வேலைகளிலும் கல்விசாரா மற்றும் சிற்றூழியர்களும் ஈடுபடுகின்றனர்.

- **மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் சேவை**

பாடசாலையில் பலவகையான தேவைகளுக்கு மின்சாரமும் நீரும் பயன்படுத்தப் படுகின்றன.

- **தொடர்பாடல் சேவை**

பாடசாலை உள்ளக, வெளியக தேவைகளுக்குத் தொடர்பாடல் சேவை அவசியமாகக் கருதப்படுகிறது.

உ-ம்:
- தொலைபேசி
- இணையம்
- இன்டர்கொம்
- விளம்பரப் பலகை
- ஒலிபெருக்கி

**● பாடசாலைச் சிற்றுண்டிச் சாலை**

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளைச் சிற்றுண்டிச் சாலையில் பெற்றுக் கொள்ளல்.

**● பாடசாலை கூட்டுறவு நிலையம்**

மாணவர்களுக்கு நாளாந்தம் தேவைப்படும் கற்றல் உபகரணங்கள் எழுது பொருள்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் போன்றவற்றை பாடசாலை கூட்டுறவு நிலையம் குறைந்த விலையில் வழங்குகின்றது.


**● பற்சிகிச்சை நிலையம்**

பாடசாலை மாணவரின் பற்சுகாதாரத்தை மேம்படுத்தலை பற்சிகிச்சை நிலையம் கொண்டுள்ளது.

**● பாடசாலை நூலகம்**



பாடசாலை மாணவரின் அறிவினை விருத்தி செய்ய பாடநூல்கள், சஞ்சி கைகள், புதினத்தாள் போன்றவற்றை நூலகங்களில் பயன்படுத்தலாம்.



**செயற்பாடு**

பாடசாலையின் தேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப்படும் சேவைகளை நிரல்படுத்துக.

## மாணவரின் தேவைகள் விருப்பங்களினால் எழும் நடத்தை மாற்றம்

மனிதனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு பல்வேறுபட்ட பொருட்களையும் சேவைகளையும் வாங்க வேண்டியுள்ளது.

இத்தேவைகள் விருப்பங்கள் சகலவற்றையும் கொள்வனவு செய்வதற்கு எம்மிடம் காணப்படும் நிதிப்பலம் மட்டுப்படுத்தப்பட்டதாகவுள்ளது. அதேவேளை வருமானம் அதிகரிக்கும் வேகத்தை விட பொருட்கள் சேவைகளின் விலைகள் பலமடங்கு அதிகரித்த வண்ணமுள்ளது.

பொருட்கள் சேவைகள்மீது கேள்வி எழுப்பும் போது அல்லது வாங்கும் போது சரியான தீர்மானம் எடுத்தல் அவசியமாகும். தேவைகளுக்கேற்ப தீர்மானங்கள் மேற் கொள்ளும் போது நுகர்வோர் பல்வேறு நடத்தை மாற்றங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளாவன:

- தமது விருப்பம் / திருப்தி
- வயது
- தொழில்
- வருமானம்
- சமூக அந்தஸ்து
- வாழ்க்கைக் கோலம்
- சூழல்
- தகவல்
- பாதுகாப்பு
- தற்காலப் போக்கு
- பழக்க வழக்கம்
- விளம்பரம்

மேற்குறிப்பிட்ட காரணிகளுள் திருப்தி, வயது, வாழ்கைக் கோலம், வருமானம், சமூக அந்தஸ்து என்பவற்றுக்கு ஏற்ப நுகர்வோரின் பொருட் கொள்வனவுத் தீர்மானங்கள் வேறுபடுகின்றன. சரியான தீர்மானங்களை மேற்கொள்ள தகவல் உதவுகின்றது.

## தகவல்கள்

பொருள்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்பு நுகர்வாளன் அப்பொருள் பற்றிய தகவல்களை அறிவதில் கூடிய கவனத்தைச் செலுத்து கின்றான். இதன் மூலம் தான் செலவிடும் பணப்பெறுமதிக்குரிய பொருள்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதே எதிர்பார்ப்பாகும்.

தகவலின் மூலம் சரியானதும் தரமானதும் திருப்திகரமானதுமான பொருள்களைத் தெரிவு செய்துகொள்வதற்கும் வியாபாரிகளின் மோசடிகளிலிருந்து ஏமாறாமல் இருப்பதற்கும் தரமற்ற பொருள்களை வாங்குதலைத் தவிர்த்து கொள்ளவும் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவும் தகவல்கள் உதவுகின்றன.

## தகவல்களை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள்

- குடும்ப அங்கத்தவர்கள், உறவினர், நண்பர்கள், அயலவர் மற்றும் சமூகத்தினரிடமிருந்து.
- விளம்பர முகவர், பலவித கண்காட்சிகள், சுவரொட்டி, பிரசுரம் போன்றவற்றின் மூலம்.
- பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, படக்காட்சி, இணையம் என்னும் வெகுசன ஊடகங்கள் மூலமாக.
- பண்டமொன்றைத் தொடர்ந்து நுகர்வு செய்வதன் மூலமான அனுபவ அறிவு.

மாதிரி விளம்பரம்




## மாணவரின் நடத்தை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களாவன

- விளம்பரம்
- பொதியுறை
- கண்காட்சிகள்
- தொலைக்காட்சி
- ஏனைய மாணவர் போல தாமும் நுகர விரும்புதல்
- தொடர்ச்சியாக ஒரு பொருளில் நாட்டம்
- வானொலி
- இணையம்


மாணவர்கள் தமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு பல்வகையான பொருள்களையும் சேவைகளையும் வாங்கும் போது பொருள் பற்றிய பூரணமான தகவல்களை அறிந்து வாங்குவதன் மூலம் தரமானதும் திருப்திகரமானதுமான பொருள் ஒன்றினைக் கொள்வனவு செய்யலாம்.

## மாணவரின் நடத்தை மாற்றம்

பாடசாலையொன்றில் மாணவரின் தேவைகளில் ஒன்றான கல்வியினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் எதிர்காலத்திற்கேற்ற நற்பிரஜை ஒருவராக விளங்குவார். இது மாணவனில் ஏற்படும் நடத்தை மாற்றமாகும்.

மாணவனின் உணவுத் தேவையை எடுத்துக் கொண்டால் பாடசாலையில் காணப்படும் சிற்றுண்டிச் சாலையில் உணவுப் பண்டங்களைப் பெறமுடியும். இந்நிலையில் அவன் எவ்உணவுப் பண்ணடத்தை வாங்குவது எனும் தீர்மானத்தை எடுக்கிறான். இங்கு அவனது நடத்தையில் மாற்றத்தைக் காண முடியும்.

விளையாட்டின் மூலம் உடலுள விருத்தி, நற்பழக்கவழக்கம், ஒழுக்கம், வெற்றி தோல்விகளை எற்றுக் கொள்ளும் மனப்பாங்கு போன்ற நடத்தை மாற்றங்கள் மாணவரிடத்தில் உருவாக்கப்படுகின்றன.



### செயற்பாடு

உமது குடும்பத்தினர் நுகரும் பொருட்கள் மற்றும் சேவைகள் பத்தினைக் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு அப்பொருள்களை வாங்குவதற்குத் தீர்மானித்த காரணிகளையும் அப்பொருள் பற்றி தகவல் பெற்ற ஊடகங்களையும் குறிப்படுக.

| தொடர் இல. | பொருள்கள்/ சேவைகள் | பொருள்களை வாங்குவதற்கு தீர்மானித்த காரணிகள் | தகவல் பெற்ற ஊடகம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

# 5-2 தரமானதும் திருப்திகரமானதுமான பொருள்கள் சேவைகள்

எமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொருட்களையும் சேவைகளையும் நுகர்கின்றோம். அப்பொருட்கள் சேவைகள் தரமானதும் திருப்திகரமானதாகவும் இருத்தல் அவசியம்.

இன்று எமது தேவைகளும் விருப்பங்களும் பெருகியுள்ளன. இவற்றைச் சந்தைகளே நிறைவேற்றுகின்றன. சந்தைகள் போட்டித் தன்மை மிகுந்துள்ளதால் ஒரே பயன்பாடுடைய பொருட்களை பலவகையான நிறுவனங்கள் சந்தைக்குக் கொண்டு வந்துள்ளன. இப்பொருட்களில் தரமானதும் திருப்திகரமானதுமான பொருட்களை வாங்க வேண்டியுள்ளது.

தற்காலத்தில் சந்தையில் தரக்குறைவான பொருட்களை தரமானது எனக் கூறி நுகர்வோர் ஏமாற்றப்படுகின்றனர். இவ்வாறு ஏமாறாதிருக்க எமக்குத் தரமான பொருட்கள் பற்றிய அறிவு அவசியமாகும்.



மளிகைக்கடை

சிறப்புச்சந்தை



## பொருள்களை வாங்கும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களாவன

- தரம்
- விலை
- வருமானம்
- தற்காலப் போக்கு
- பாதுகாப்பு
- விளம்பரம்
- சமூக அந்தஸ்து
- பழக்க வழக்கங்கள்
- பயன்பாடு
- விடயங்கள்
- அளவு

## தரம்

ஒரு பொருள் கொண்டிருக்க வேண்டிய சகல அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது தரமான பொருளெனப்படும்.


பொருளொன்று தரமானது என்பது பலவகையான தரக்குறியீடுகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான தரக்குறியீடுகள் சில வருமாறு.

SLS, ISO - 9001

- SLS / ISO என்பது பொருட்களின் தரத்தை உறுதிபடுத்தி வழங்கியுள்ள குறியீடாகும். இக்குறியீடுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் உச்ச திருப்தியைப் பெறலாம்.

## சுட்டித் துண்டு (Label)

பொருளொன்றில் உள்ள பூரணமான தகவல்களை வெளிப்படுத்துவதே சுட்டித்துண்டாகும். இச்சுட்டித்துண்டைப் பார்வையிடுவதன் மூலம் பொருள் பற்றிய தகவல்களை அறிந்து அதன் மூலம் தரமானதும் திருப்தியானதுமான பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும்.




2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்கம் கொண்ட நுகர்வாளர் நடவடிக்கை தொடர்பான அதிகார சபைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நுகர்வாளர்களைப் பாதுகாப்பதற்குரிய தகவல்கள் உள்ளடங்காது விடுதல், தவறான தகவல்களை உள்ளடக்குதல் என்பன தண்டணைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

## சுட்டித்துண்டில் உள்ளடங்கும் விடயங்கள்


- விலை
- நிறை / அளவு
- வியாபாரக் குறி
- பொருளின் பெயர்
- உற்பத்தித் திகதி
- காலாவதியாகும் திகதி
- பயன்படுத்தும் முறை
- பாதுகாக்கும் முறை
- பொருட்கலவை
- தரக்குறியீடுகள்
- உற்பத்தி செய்த நிறுவனம்

## நுகர்வோர் தேவை

நுகர்வோரின் தேவைகளைத் திருப்தி செய்யக்கூடிய அனைத்தும் நுகர்வோர் தேவைகளாகும். நுகர்வோரின் தேவைகள் வயது,பால்,இனம்,மதம்,கலாசாரம் தொழில் என்பவற்றுக்கு ஏற்ப மாறுபடும்.

**உதாரணம்:-**

1. குழந்தைகளுக்கான தேவை: பால்,பிஸ்கட், விளையாட்டுப் பொருள்
2. சிறுவர்களுக்கான தேவை: ஐஸ்கிரீம், யோகட், புத்தகங்கள்
3. விளையாட்டு வீரனுக்கான தேவை பந்து, துடுப்பு, வலை, உடை



செயற்பாடு

1. பொருளொன்றின் பொதியுறைகளை அல்லது சுட்டித்துண்டு களைச் சேகரித்து பொதுவான அம்சங்களை இனங்காண்க.

2. பத்திரிகைகளில் காணப்படும் பொருள்கள் பற்றிய விளம்பரங் களை சேகரிக்குக.

3. வானொலி, தொலைக்காட்சிகளில் பொருள் பற்றிக் குறிப்பிடும் பண்புகளை குறிப்பிடுக.

## 5-3 பிரதேசத்தின் தேவைகளை வழங்கும் நிறுவனங்களும் அமைப்புக்களும்.

எமது பிரதேசத்தின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு பல்வேறு வகையான வியாபார நிறுவனங்களும் அமைப்புக்களும் காணப்படுகின்றன. இந்நிறுவனங்களினதும் அமைப்புகளினதும் நோக்கம், உரிமை, தன்மை, அளவு போன்றவற்றை 6ஆந் தரத்தில் கற்றோம்.

இவ்வாறான நிறுவனங்களும் அமைப்புகளும் எமது பிரதேசத்தின் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றுகின்றன என்பதை நோக்குவோம்.

பிரதேசத்தில் காணப்படும் வியாபார நிறுவனங்களையும் அமைப்புக்களையும் அவை ஈடுபட்டுள்ள துறைகளின் அடிப்படையில் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

- உற்பத்தி நிறுவனம்
- வியாபார நிறுவனம்
- சேவை நிறுவனம்
- நிதி நிறுவனம்

### உற்பத்தி நிறுவனம்

உற்பத்தி நிறுவனங்களை கைத்தொழில் நிறுவனங்கள், விவசாய நிறுவனங்கள் என இருவகைப்படுத்தலாம்.

**விவசாயம்**

உ+ம் :-

நெற்பயிர்ச்செய்கை.
தேயிலைச் செய்கை.
கடற்றொழில்.
வனத்தொழில்.
சிறு பயிர்ச்செய்கை.
வாழைச் செய்கை
இறப்பர் உற்பத்தி
தெங்கு உற்பத்தி
மரக்கறி உற்பத்தி
மலர்ச் செய்கை
பால் உற்பக்கி

**கைத்தொழில்**

உ+ம் :-

பாதணியுற்பத்தி.
செங்கல் உற்பத்தி.
ஆடை உற்பத்தி.
உருக்குக் கைத்தொழில்.
தளபாட உற்பத்தி.
கயிறு திரித்தல்
சட்டி பானை வனைதல்
முகமூடி உற்பத்தி
பற்றிக் வேலைப்பாடு

**பிரதேசத்தின் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களும் விவசாயிகளும்.**



பித்தளை வேலைப்பாடு



மர வேலைப்பாடு



செங்கல் உற்பத்தி



கருங்கல் உடைத்தல்



தும்புக் கைத்தொழில்



முகமூடிக் கைத்தொழில்



தேயிலைக் கொழுந்து பறித்தல்



கிடுகு இழைத்தல்



கறுவாக் கைத்தொழில்



கயிறு திரித்தல்



மட்பாண்டக் கைத்தொழில்

## வியாபாரம்

வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பிரதான தொழிற்பாடு பொருள்களை வாங்குதலும் விற்றலுமாகும்.

உ+ம் -

- கட்டடப் பொருள்கள் விற்பனை.
- பலசரக்கு விற்பனை.
- வீட்டுபகரணங்கள் விற்பனை.
- அரிசி பால்மா விற்பனைகள்.
- வாகனங்கள் விற்பனைகள்.
- மருந்துவகை விற்பனை
- ஆடை அணிகள் விற்பனை
- இறைச்சி, மீன், முட்டை விற்பனை
- இரசாயனப் பசளை விற்பனை

## விற்பனைக்கான அல்லது கொள்வனவுக்கான சில பொருள்கள்



ஸ்கூட்டர்



தயிர்



கேக்



வாழைப்பழம்



சோறு சமைக்கும் உபகரணம் (Rice Cooker)



முந்திரிகை

## சேவைகள்

சேவை வழங்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வணிகங்களினதும் அமைப்புகளினதும் உதவிக்காக, துணைச்சேவை நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. மனிதனின் நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கும் வினைத்திறனாக்குவதற்கும் இச் சேவைகள் உதவி புரிகின்றன. அவ்வாறான சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் சில வருமாறு .

**உதாரணம்:**

- நகரசபை
- காவற்துறை நிலையம்
- பொதுநூலகம்
- தபாற்கந்தோர்
- மோட்டார் பழுது பார்க்கும் நிலையம்
- முடிதிருத்தும் நிலையம்
- விளையாட்டு மற்றும் சமூக நலனோன்பு நிலையங்கள்
- பிரதேசசெயலகம்
- போக்குவரத்துச்சேவை
- சமய நிறுவனங்கள்
- வைத்தியசாலை

## எமக்குச் சேவை செய்யும் நிறுவனங்கள்



நகரசபை




தபாற்கந்தோர்



பிரதேச செயலகம்



பௌத்த விகாரை




மஸ்ஜித்



பொதுநூலகம்



இந்துக்கோவில்



கிறிஸ்தவ ஆலயம்



வைத்தியசாலை

## நிதிநிறுவனங்கள்

மனிதனதும் நிறுவனங்களினதும் நிதி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள் நிதி நிறுவனங்களாகும்.

உ+ம் - வங்கிகள்


காப்புறுதிக் கம்பனிகள்

குத்தகைக் கம்பனிகள்

நிதிக் கம்பனிகள்

கடன் சங்கங்கள்

## நிதித்தேவைகளை வழங்கும் நிறுவனங்கள்



## செயற்பாடு

உமது பிரதேசத்தில் காணப்படும் பல்வேறு வகையான உற்பத்தி தொழிற்பாடுகள் சம்பந்தமான தகவல்களை சேகரித்து பட்டியல் படுத்துக.

| தொடர் இல. | நிறுவனம் | உற்பத்தி | சேவை | வியாபாரம் | நிதி |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | |
| 02 | | | | | |
| 03 | | | | | |
| 04 | | | | | |
| 05 | | | | | |
| 06 | | | | | |
| 07 | | | | | |
| 08 | | | | | |
| 09 | | | | | |
| 10 | | | | | |

## உற்பத்தித் தொழிற்பாடு

மனிதனது தேவைகளை நிறைவேற்றும் நோக்கில் பொருட்கள் சேவைகள் ஆக்கப்படுவது உற்பத்திச் செயற்பாட்டின் மூலம் நிகழ்கிறது.

உற்பத்தித் தொழிற்பாடு என்பது உள்ளீடுகளை நிலைமாற்றல் செயற்பாட்டுக்கு உட்படுத்தி வெளியீடுகளாக மாற்றுவதாகும்.இதனை பின்வரும் வரிப்படம் மூலமும் காட்டலாம்.

**உள்ளீடு (வளம்)** → **உற்பத்திச் செயற்பாடு** → **வெளியீடு (பொருட்கள் / சேவைகள்)**

உற்பத்தித் தொழிற்பாட்டினை பொருளுற்பத்தி,சேவையுற்பத்தி எனப் பிரிக்கலாம்.

## பொருளுற்பத்தி

எமது பிரதேசத்தில் காணப்படும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் உற்பத்திச் செயற்பாட்டினை பின்வருமாறு காட்டலாம்.

**உள்ளீடு**

- துணி
- நூல்
- பொத்தான்
- கடினத்துணி
- தையல் இயந்திரம்
- தையல் உபகரணம்
- ஊழியர்கள்
- முகாமையாளர்
- வர்ணச் சாயம்

→

**செயற்பாடு**

- அளத்தல்
- வெட்டுதல்
- தைத்தல்
- பொருத்துதல்
- மடித்தல்
- பொதியிடல்

→

**வெளியீடு**

தைத்த ஆடைகள்

# சேவையுற்பத்தி

ஒரு வைத்தியசாலையின் சேவைத் தொழிற்பாடு

**உள்ளீடு**

- வைத்தியசாலைக் கட்டடம்
- வைத்தியர்
- தாதி
- மருத்துவப் பொருட்கள்
- மருத்துவ உபகரணங்கள்
- அம்பியூலன்ஸ்
- சிற்றூழியர்
- ஆய்வு கூடம்

→


**செயற்பாடு**

- பரிசோதனை செய்தல்
- சத்திரசிகிச்சை அளித்தல்
- மருந்து வழங்கள்
- நோயாளர் பராமரிப்பு

→

**வெளியீடு**

சுகதேகிகள்



**செயற்பாடு**

1. உமது பாடசாலையில் நிகழும் சேவையுற்பத்தித் தொழிற்பாட்டை வரிப்படம் மூலம் காட்டுக.

2. உமது பிரதேசத்தில் காணப்படும் உற்பத்தி நிறுவனம் ஒன்றினைப் பார்வையிட்டு அதனது உற்பத்தித் தொழிற்பாட்டை பாயச்சல் படம் மூலம் காட்டுக.

## உற்பத்திச் செலவு

பொருளொன்றினை உற்பத்தி செய்வதற்காக ஏற்படும் செலவினமே உற்பத்திச் செலவாகும். இவ்வுற்பத்திச் செலவின் அடிப்படையிலேயே பொருளின் விலை தீர்மானிக்கப் படுகின்றது.

உற்பத்தி நிறுவனங்கள் இயன்றவரை பொருட்களை உற்பத்தி செய்யும் பொழுது குறைந்த செலவிலேயே உற்பத்தி செய்ய முயற்ச்சிக்கின்றன. இதன் மூலம் பொருளின் விலையைக் குறைக்க முடிகின்றது.

உற்பத்திக்கான செலவினங்களை மூலப்பொருட் செலவினம்,கூலிகள், ஏனைய செலவுகள் என வகைப்படுத்தலாம்.

## மூலப்பொருட் செலவு

பொருளொன்றை உற்பத்தி செய்வதற்காக உள்ளீடு செய்யப்படும் பொருட்களின் செலவினம் மூலப்பொருட் செலவினம் எனப்படும்.

உ-ம்: மேற்சட்டை உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், துணி, பொத்தான், நூல் போன்றவையாகும்.

## ஊழியச் செலவு

பொருளொன்றின் உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபடும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கூலி ஊழியச் செலவு எனப்படும்.

உ-ம்: சேர்ட் உற்பத்தி நிறுவனமொன்றில் சேர்ட் ஒன்றைத் தைக்கும் ஊழியருக்கு நாளொன்றுக்கு அல்லது ஒரு சேர்ட்டுக்கான கூலி அடிப்படையில் செலுத்தப்படும்.

- மூலப்பொருட் செலவுகளையும் ஊழியச் செலவுகளையும் கூட்டுவதன் மூலம் உற்பத்திச் செலவினத்தை அறிந்து கொள்ளலாம்.

**ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கான உற்பத்திச் செலவையும் அதன் விலை நிர்ணயிக்கும் முறையையும் பார்ப்போம்.**

ஆடைத்தொழிற்சாலையொன்றில் உற்பத்தி செய்யப்படும் பத்து மேற் சட்டைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் வருமாறு:

| | பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களும் ஊழியமும் | அளவு | விலை | |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ச. |
|  | துணி | 25 மீற்றர் | 2,100 | 00 |
| | நூற்பந்து | 04 | 100 | 00 |
| | பொத்தான் | 60 | 150 | 00 |
| | தடிப்பான துணி (Stiff) | 02 மீற்றர் | 150 | 00 |
| | தையற் கூலி (ஒருசேட்டுக்கு) | 100 | 1,000 | 00 |
| | மொத்தச் செலவு | | 3,500 | 00 |

- இந்த ஆடை உற்பத்தி நிலையத்தில் 10 சேர்ட்டுக்கள் உற்பத்தி செய்வதற்காக ஏற்பட்ட உற்பத்திச் செலவை பின்வருமாறு கணிக்கலாம்.

$$\text{அலகுக்கான செலவு} = \frac{\text{உற்பத்திக்கான மொத்த செலவு}}{\text{உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை}}$$


$$\text{ஒரு மேற்சட்டைக்கான உற்பத்திச் செலவு} = \frac{3500}{10} = 350 \text{ ரூபா}$$

∴ ஒரு மேற்சட்டைக்கான உற்பத்தி செலவு 350 ரூபா ஆகும்.

- உற்பத்திச் செலவுடன் குறிப்பிட்ட வீத இலாபமும் ஏனைய, செலவுகளின் அலகுச் செலவும் சேர்க்கப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது.

- ஒரு சேட்டுக்கான இலாபம் 100 ரூபா என நிர்ணயிக்கப்பட்டால் அதற்கான விற்பனை விலை 350 + 100 = ரூபா 450 ஆகும்

- தேவையற்ற செலவினங்களைக் குறைத்து வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதனூடக பொருளின் விலையை குறைப்பதோடு விற்பனையை யும் அதிகரிக்கலாம்.



## செயற்பாடு

பூச்சாடி உற்பத்தி செய்யும் உற்பத்தியாளனாகிய என். எம். நிம்ஷாட் என்பவர் 20 பூச்சாடிகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்திய உள்ளீடுகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| சீமேந்து பைக்கற் | ............ 01 | .................. | ரூபா 750.00 |
| மனல் தாச்சி | ............ 25 | .................. | ரூபா 650.00 |
| வர்ணம் | ............ 01 | .................. | ரூபா 450.00 |
| ஒரு சாடிக்கான கூலி | (25 ரூபா) | | ரூபா 500.00 |

ஒரு சாடிக்கான இலாப எதிர்பார்ப்பு (15 ரூபா வீதம்)

பின்வருவனவற்றை கணிக்குக.

01) 20 பூச்சாடிக்கான மொத்தச் செலவு யாது ?
02) ஒரு பூச்சாடி உற்பத்திக்கான செலவு யாது ?
03) ஒரு பூச்சாடிக்கான விற்பனை விலை யாது ?

- உங்கள் பாடசாலையில் கணனிக் கூட வசதிகள் காணப்படுமாயின் கணனியைப் பயன்படுத்தி விரிதாளைத் (Spread Sheet) தயாரிக்குக.

